தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 8, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992 ஏப்ரல் 20, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

> "துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
> இன்பம் பயக்கும் வினை."

முடிவில் இன்பம் கொடுக்கும் தொழிலைச் செய்யும்போது துன்பம் மிக வந்தபோதிலும் துணிவு மேற்கொண்டு செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள், குவினா எண் 550, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

550—

நீதிமன்றக் கட்டிடம் கட்டுதல்.

*3794—திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;—

(அ) திருத்தணி நகரில் இயங்கும் நீதிமன்றங்களுக்குக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). இப்பொருள் குறித்த செயற்குறிப்பு உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரை தொன்மை வாய்ந்த திருத்தல நகராக அறிவித்தும், திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையை இரண்டு மடங்காக விரிவுபடுத்தியும் எனது தொகுதியில் திருவாலங்காடு புறக் காவல் நிலையத்தை காவல் நிலையமாக உயர்த்திக் கொடுத்தும் கோடிக்கணக்கான பணங்களை இன்றையதினம் திருத்தணி தொகுதிக்காக ஒதுக்கீடு செய்து பல்வேறு நலப்பணிகளைப் புரிந்து வருகின்ற தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாய் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசுக்கு தொகுதி மக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதிலே மகிழ்ச்சியடைவதோடு, நல்ல காரியங்களை நாளும் ஆற்றி வருகின்ற எங்களுடைய இதய தெய்வத்தினுடைய ஆட்சிக் காலத்தில்—சுதந்திரம் அடைந்து இது வரையில் எங்களது திருத்தணி நகரில் இயங்கி வருகின்ற குற்றவியல் மற்றும் மாவட்ட முன்சீப் நீதிமன்றங்களுக்கு கட்டிடம் இல்லாது அவ்வப்போது பல்வேறு இடங்களுக்கு இடம் பெயர்கின்ற ஒரு அவல நிலை இருப்பதாலும் அங்கே பணியாற்றுகின்ற வழக்குரைஞர்களுக்கு சரியான முறையில் போதிய இட வசதியும் மற்றும் நல்ல நிலையிலே அங்கே கட்டிடங்கள் இல்லாத காரணத்தினாலும் பாதிப்பான நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, எங்களது தணிகை நகரிலே இருக்கின்ற நீதிமன்றக் கட்டிடங்களுக்கு இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாயினுடைய அரசு—இந்த ஆண்டிலே நீதிமன்றக் கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று நான் மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் மூலம் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் கருத்துரு பரிசீலனையில் இருக்கிறது. அது அரசுக்கு வந்தவுடன் அந்தப் பணிகள் தொடர்ந்து செய்யப்படும்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியில் உள்ள நீதிமன்றக் கட்டிடங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வரைபடமும் தயார் செய்யப்பட்டு உயர்நீதி மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பல ஆண்டுகளாக கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. எனவே, அங்கே இருக்கின்ற நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் வருமா என்கின்ற ஒரு கேள்விக் குறி இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நீதிமன்றக் கட்டிடம் கட்டுடுவதற்கான பணியில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பல்வேறு நலப்பணிகளைத் தொடர்ந்து தொகுதிக்கு ஆற்றி வருகின்ற இந்தக் காலத்தில் அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் புரட்சித் தலைவியின் அரசால் தான் செய்ய முடியும் என்ற நம்பிக்கையோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டில் துரிதப்படுத்தி நீதிமன்றக்

1992 ஏப்ரல் 20]

கட்டிடத்தைக் கட்டித் தருவதற்கு புரட்சித் தலைவியினுடைய அரசு முன்வருமா என்பதை மீண்டும் நான் பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் பெருமகனாரிடம் அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரிதப்படுத்தப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 551, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

551—

பத்திர எழுத்தர்களை நியமிக்கத் தேர்வு

*6233— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பத்திர எழுத்தர்கள் (Document Writers) லைசென்ஸ் முறையை மாற்றும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசே அவர்களைத் தேர்வு செய்து நியமிக்கும் முறை கொண்டுவருமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பதிவுத்துறையில் ஆவண எழுத்தர்கள் லைசன்ஸ் முறைபற்றி எந்த மாற்றமும் இல்லை. நடைமுறையில் உள்ள விதிப்படி எல்லாம் நடக்கும்.

முற்பகல் 9—35

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பத்திர எழுத்தர்கள் என்பவர்களால் இன்றைக்கு வெகுவாக கிராமப்புறங்களில் இருந்து வருகிற விவசாயிகள் பெரிதும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : பாதிக்கப்படுகிற நிலையில் இருக்கிறார்கள். இத்தனை ஏக்கர் பூமி, இவ்வளவு ரூபாய் சொத்துக்கு இவ்வளவு ரூபாய் தான் வாங்கவேண்டுமென்று ஒரு